திரு. என். டென்னிஸ் : வாட்டரி ப்ராஜக்ட் உள்ள இடங்களில் இப்படிப்பட்ட நிலையங்கள் அதிக அளவில் அமைக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

Hon. Thiru Si. Pa. ADITANAR : What I have stated now is that the Agro-Engineering and Service Co-operative Centre has been commenced in accordance with the scheme settled by the Centre and one of the activities of the Engineering Centre is to engage itself in minor irrigation, that is digging of wells and installing pumpsets.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தண்டராம்பட்டு வேளாண்மைப் பொறியியல் செப்பனிடு கூட்டுறவு நிலையத்தின் தலைவர் என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கழகம் பூச்சி தெளிக்கும் மெஷின்களை ரிப்பேர் செய்து வருகிறது. உரங்கள் எல்லாம் விற்பனை செய்து வருகிறது.

Central Farm at Chengam

* 136 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Central Farm at Chengam in North Arcot district has gone into production; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் செங்கம் மத்திய அரசுப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. பண்ணை ஆரம்பிக்கப்பட்டு அதற்கான இயந்திரச் சாதனங்கள் வரப்பெற்ற உடனே பண்ணைக்கான முதல் நிலை வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அங்கு மிக மோசமான வறட்சி நிலை நிலவி வந்தது. அவ்வாறு இருந்தபோதிலும் சில பயிர்கள் பயிரிடப்பட்டன. அதில் 16.90 ஏக்கர் பரப்பில் அறுவடை செய்யப்பட்டுவிட்டது. மேலும் நிலச் சீர்திருத்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நிலச் சீர்திருத்த வேலைகள், மற்றும் கிணறுகள் வெட்டும் வேலைகள் முடிந்த பின் பெரிய அளவில் சாகுபடி செய்யப்படும்.

திரு. என். டென்னிஸ் : வேறு இடங்களுக்கும் இம்மாதிரிப் பண்ணைகள் அமைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது மத்திய அரசின் துணையோடு நடத்தப்படுகிற பண்ணையாகும். இதற்கு ஏறத்தாழ

1972 டிசம்பர் 12]

பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு மேல் தேவைப்படுகிறது. நல்ல தண்ணீர் வசதியும் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைக்குட்பட்டு வேறு இடம் இருப்பதாகக் கருதப்படுமானுல், அது பற்றிக் கவனிக்கப்படும்.

Production of Khadi Cloth

*137 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Food be pleased to state the value of cloth produced by the Khadi Department in this State during 1971-72?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : ரூ. 198.17 லட்சங்கள்

திரு. என். கிட்டப்பா : உத்தமர் காந்தியார் வழிவந்தவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் உற்பத்தியான கதர்த் துணியின் அளவையும், விற்பனையான கதர்த் துணியின் அளவையும்விட, தென்னுட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணு வழியில் வந்த டாக்டர் கலைஞர் ஆட்சியில் கதர் உற்பத்தி அதிகமாகி இருக்கிறதா ? அதைப் போலவே விற்பனையும் அதிகமாகி இருக்கிறதா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : விற்பனை அதிகம் என்ற அளவில் இல்லாவிட்டாலும் விற்பனை குறையாமல் இருக்கிறது. இதற்கு முன்பு விற்றது 80 சதவிகிதம் கடனுகவும் 20 சதவிகிதம் ரொக்கமாகவும் விற்கப்பட்டது. இப்போது கடனுக விற்பதைக் குறைத்து ரொக்கமாக விற்பதை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, இப்போது உற்பத்தியும், விற்பனையும் ஓரளவு சீராக இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கதர்த் தொழிலுக்கு ஆக்கம் கொடுக்கின்ற வகையில் இந்த இலாக்காவை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதர்த் துணியை அணிந்து இந்த நாட்டுக்கு வழி காட்டுவார்களா?

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி : முழுக்க முழுக்க கதர் கட்டிக் கொண்டிருந்தவன் நான். அண்ணு அவர்கள் கைத்தறித் துணியைக் கட்ட வேண்டுமென்று சொன்ன பிறகு, கடந்த பத்தாண்டுகளாக கைத்தறியையும், கதரையும் கலந்து கட்டுகிறேன். பாதி அளவு கைத்தறியும், பாதி அளவு கதரும் கட்டி வருகிறேன்.